முன்னாள் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் –

# பெரியண்ணன் 27ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

## புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்! அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை. நவ.14 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை முன்னாள் மாவட்டச் செயலாளரும், அரசு தலைமை கொறடாவுமான பெரியண்ணன் அவர்களின் 27ம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு 15.11.2023 புதன்கிழமை காலை 8 மணியளவில் புதுக்கோட்டை நகர தி.மு.க சார்பில் கீழ 2ம் வீதி நெல்லு மண்டி தெருவில் காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணியளவில் மேலக்கோட்டையில் உள்ள பெரியண்ணன் அவர்களின் சமாதிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் இரத்த தான முகாம் நடைபெறுகிறது.





இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கி றோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில கூறி உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி துணைத் தலைவர்

# கே.ஜி.மாரிக்கண்ணன் தாயார் பொன்னிமாரியாயி மறைவு!

## குன்னம் சி.இராஜேந்திரன் - எம்.பிரபாகரன் அஞ்சலி!

பெரம்பலூர், நவ. 14 -

பெரம்பலூர் மாவட்ட இலக்கிய அணி முன்னாள் தலைவர் கோவிந்தன் மனைவியும், பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளரும், தற்போதைய மாவட்ட வழக்கறிஞர் அணி துணை தலைவருமான கே.ஜி. மாரிக்கண்ணன் தாயார் பொன்னி மாரியாயி(80), என்பவர் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

பெரம்பலூர் சங்க பகுதியில் அன்னாரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில நிர்வாகிகள் பா. துரைசாமி, டாக்டர் செ. வல்லபன், இரா.ப. பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத் மற்றும் மாவட்ட , ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி காணை ஊராட்சி ஒன்றியம் கெடார் ஊராட்சியில் ரூ.9.60 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையம் கட்டிடத்தை விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் – விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி திறந்து வைத்தார். ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு. வி.இராஜா, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சென்னை பெரியார் திடலில் அன்னை மணியம்மையார் அரங்கில் 11.11.2023 – சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பெருங்கவிக்கோ துணைவியார் அன்னை சேதுமதியின் 18 வது ஆண்டு நினைவேந்தலும் தமிழக சிறப்புக்குரியவர்களுக்கு பாராட்டுதலும் பொற்கிழியும், வாழ்த்து விருதும் சென்னை வேல்ஸ் பல்கலைக் கழக மொழிகள் புல முதல்வர் பேராசிரியர் ப. மகாலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் இ.ஜே.சுந்தர் தொடக்கவுரையாற்றிட, திராவிட கழகப் பொதுச் செயலாளர் கவிஞர் கலி.பூங்குன்றன் அனைத்து தமிழ்ச் செம்மல்களுக்கு விருதும் பொற்கிழியும் வழங்க சிறப்புரை ஆற்றினார். பன்மொழிக் கவிஞர் முனைவர் எழில் வேந்தன், முதுபெரும் புலவர் வே.பதுமனார் உள்ளிட்ட பதினெட்டு தமிழறிஞர்களுக்கும் பாராட்டுதலும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பெருங்கவிக்கோவின் புதல்வர்கள் வா.மு.சே.திருவள்ளுவர், வா.மு.சே.ஆண்டவர் வாசிக்க சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளாக தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கும்பக்கரை அருவியில் 11வது நாளாக சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை..!

தேனி, நவ. 14 –

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே பிரசித்தி பெற்ற கும்பக்கரை அருவி உள்ளது. தேனி மாவட்டம் மட்டுமல்லாமல் தமிழகத்தின் பிற மாவட்டங்களைச் சேர்ந்த பொது மக்களும், கேரள மாநில மக்களும் அருவிக்கு வந்து குளித்து விட்டு செல்வர்.

விடுமுறை காலங்களில் இங்கு கூட்டம் அதிகமாக இருக்கும். இதன் நீர்ப் பிடிப்பு பகுதிகளான மேற்குத் தொடர்ச்சி மலை, வட்டக்கானல், வெள்ளக்கெவி ஆகிய பகுதிகளில் மழை பெய்தால் அருவிக்கு நீர்வரத்து இருக்கும்.

கடந்த சில நாட்களாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தொடர் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 11வது நாளாக கும்பக்கரை அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

தி.மு.க. வர்த்தகர் அணி

# திருச்சி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு !

திருச்சி மண்டலத்திற்குட்பட்ட திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், எதிர்வரும் 16-11-2023 வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அரங்கில்" கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி நவம்பர்26 அன்று திருச்சியில் நடைபெற உள்ள "கலை இரவு" விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18 -
நாள்: 11 -11- 2023.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி


# 26 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணாவின்
பெருமைமிகு மாணவன்...
முத்தமிழறிஞர் கலைஞரின்
விசுவாசமிகு தம்பி...
கழகத்தலைவர் தளபதியின்
பாசமிகு தமையன்...
நீங்கள் திராவிடம் செதுக்கிய கல்வெட்டு;
பாச நினைவோடு வாழ்கிறோம் - உமை விட்டு!

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்
**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு**
M.B.B.S. M.S. (OBST. & GYNAC.)
மாநிலங்களவை உறுப்பினர்,
மாநில மருத்துவ அணித் தலைவர்,
செய்தி தொடர்பாளர், தி.மு.க.



தோற்றம்: 11–05–1937 மறைவு: 14–11–1997

**திரு. என். வி. என். சோமு**
முன்னாள் அமைப்புச் செயலாளர், தி.மு.க.,
முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை
இணை அமைச்சர்